யென்று சொன்னார்கள். அரியலூர் அரசு கலைக் கல்லூரி தொடங்கப்பட்டு 25 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. பல முறை, பல ஆண்டுகளாக கோரிக்கைகள் அனுப்பப்பட்டும் அங்கே பி.காம். பட்டப் படிப்பு இல்லாத நிலையை மாற்றி அதனை வருகிற கல்வி ஆண்டிலாவது துவக்க அரசு முன் வருமா என அறிய விரும்புவதோடு, நானே இது குறித்து கோரிக்கை விடுத்திருக்கிறேன். பி.காம் பட்டப் படிப்பு இல்லை யென்று கடந்த ஆண்டு மாணவர்கள் உண்ணாவிரதம் இருந் தார்கள். அப்போதே நான் இந்த கோரிக்கையை விடுத்திருக் கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கைகளை ஆங்காங்கே பொதுக் கூட்டங்களில் வைக்கலாம் அல்லது உண்ணாவிரதங் களில் வைக்கலாம் அல்லது சட்டமன்றத்திலும் பேசலாம். ஆனால் முறையான கோரிக்கை கல்லூரி முதல்வரிடமிருந்துதான் வர வேண்டும். இது அரசு கலைக் கல்லூரி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 343, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

343—

ஆலங்குளம் அரசு மருத்துவமனை.

**1192* திரு. எஸ் எஸ். ராமசுப்பு:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங் குளம் அரசு மருத்துவமனையில் உள்ள எக்ஸ்ரே கருவியை இயக்க பணியாளர் இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட் டம் ஆலங்குளத்தில் உள்ள மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் நுண்கதிர் வீச்சாளர் பதவி 8–11–1991 அன்று நிரப்பப்பட்டது.

1992 மார்ச் 25]

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிரப்பப் பட்டது என்று சொன்னார்கள். உண்மையிலேயே நிரப்பப் பட்டுவிட்டது. மகிழ்ச்சியடைகின்றோம். அதே சமயத்தில் அது இன்னும் இயக்கப்படாமல் இருக்கிறது என்பதை அமைச் சர் அறிவாரா? அங்கே ஏற்கெனவே ஒரு ரேடியோகிராபரை போட்டாலும், ஒரு டாக்டரையும், அசிஸ்டெண்டையும் போட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, அது இன்னும் சரி யாக இயங்காமல் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிந்து உடனடியாக இயக்க வைக்க நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியிலே இந்தப் பணியிடம் நிரப்பப் படுமா என்று கேட்ட காரணத்தினால் நிரப்பப்பட்டது என்று சொன்னேன். இதுவரை அந்த எக்ஸ்ரே மெஷின் இயங்காமல் இருக்கிறது என்கிற தகவல் இப்பொழுது நீங்கள் சொல்லித்தான் எனக்குத் தெரியும். எனவே, நான் அன்றைக்கு மானியக் கோரிக்கையின்போது கூட சொன்னேன். சின்னச் சின்ன கருவி கள் கூட அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்றன. ஏறத்தாழ 1,703 மருத்துவமனைகள் இன்றைக்கு இருக்கின்றன. எல்லா இடங்களிலேயும் பல கருவிகளை நாம் வைத்திருக்கிறோம். அவைகள் சில நேரங்களில் இயங்காமல் போய்விடுகிற நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. எனவே, நீங்கள் இங்கே சொன்ன கருத்தை வைத்து, அதனை ஆதாரமாக எடுத்து, அதை இயக்கு வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 344, திரு. தி. சாத்தையா. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

344—

வனத்துறை ஊழியர்களின் அடிப்படை ஊதியம்

*5291 திரு. தி. சாத்தையா :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வனத்துறையில் பணிபுரியும் பாரஸ்டர்களுக்கும், ரேஞ் சர்களுக்கும் கல்வித் தகுதியும், பயிற்சியும் (டிரெயினிங்) ஒரே மாதிரியாக இருக்கும் பொழுது அடிப்படை ஊதியம் ரூ. 600 வேறுபாடு உள்ள நிலையை மாற்ற அரசு ஆவன செய்யுமா?